**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.113/2020</u>**

ம.சா.3 திரு.ஜான்பிரிட்டோ த/பெ அமலதாஸ் நாள் : 16.07.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பத்தூர் கிராமிய காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். மனுதாரர் கோவிந்தராஜ் எவ்வளவு காலம் திருப்பத்தூர், தருமபுரி மற்றும் சேலம் அரசு மருத்துவமனைகளில் தொடர் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் 03.02.2020 அன்றிலிருந்து 1 மாத காலம் சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டு அவ்வப்போது சிகிச்சை பெற்று வந்துள்ளார். விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் தான் அவர் இறந்துள்ளார் என்றால் இடது காலில் சீழ் பிடித்து இறந்துவிட்டதாக கோப்புகளில் உள்ளது. Viscera பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்றால் அதற்கான குறிப்புகள் கோப்புகளில் இல்லை.

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கோவிந்தராஜ் விபத்தினால் ஏற்பட்ட காயங்களினால் இறந்துவிட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கை உள்ளதா என்றால் கருத்துரை பெறப்படவில்லை. தொடர் சிகிச்சை என்பது பிரேத பரிசோதனை அறிக்கையில் இல்லை என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.